# 'இளநீர்' பல்!



''கோபி கிருஷ்ணா என்றாலே அண்ணாநகர் வாசிகள் பல்லைக் காட்டுவார்கள். ஆமாம்... ஏரியாவில் அவ்வளவு பிரபலமான பல் டாக்டர் இவர்!

சமீபத்தில் இளநீரை வைத்து பல் ஆராய்ச்சியில் இவர் கண்டறிந்த ஒரு விஷயம்... தமிழகம் மட்டுமில்லாது வெளிமாநில மருத்துவர்கள், பத்திரிகைகள், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் அன்புமணி போன்றவர்களால் பாராட்டப்பட்டிருக்கிறது.

கோபிகிருஷ்ணாவின் கண்டுபிடிப்பு ஏழை எளிய மக்களுக்கு மிகவும் பயனுள்ளது. ஜூ.வி. வாசகர்களுக்கும் அவரது கண்டுபிடிப்பை அறிமுகப்படுத்தலாமே?"

-அண்ணாநகர் வாசகர் ராகவன் ஆக்ஷன் செல்லில் வேண்டுகோள் வைத்திருந்தார். அப்புறம் என்ன? சிந்தாமணி சிக்னல் அருகே க்ளினிக் நடத்தி வரும் டாக்டர் கோபிகிருஷ்ணாவை சந்தித்தோம்!

அதென்ன சார் இளநீர் பல் ஆராய்ச்சி?

"பள்ளிக்கூடங்களில் சிறுவர்கள் விளையாடும்போது, தவறி விழுந்து முகத்தில் அடிபட்டால் முதலில் பாதிக்கப்பட்டு விழுவது பற்கள்தான். அதேபோல் இளைஞர்கள், நடுவயதுக்காரர்கள் எதிர்பாராத வகையில் வாகன விபத்தில் சிக்கும்போதும் பற்கள் எகிறிப்போய்விடும். இதுமாதிரி உடைந்து விழுந்த பற்களின் ஆயுசு சுமார் இருபது நிமிடங்கள்தான்! அதற்குள் அந்தப் பல்லை மீண்டும் பொருத்தாவிட்டால் அதன்உயிரணுக்கள் இறந்துவிடும்.



கோபிகிருஷ்ணா

பொதுவாக, வெளிநாட்டு பள்ளிக்கூடங்களில் 'சேவ் ஏ டூத்' என்ற திரவத்தை வைத்திருப்பார்கள். மாணவர்களின் பற்கள் திடீரென விழுந்து விட்டால், அதை அந்த திரவத்தில் போட்டு பல் டாக்டரிடம் அனுப்புவார்கள். ஆனால், நமது நாட்டு கிராமப் புறங்களில் பசும்பால், ஐஸ், கைகுட்டை... இப்படி ஏதாவது ஒன்றில் பற்களைப் போட்டு எடுத்துக் கொண்டு டாக்டரிடம் ஓடுவார்கள். இந்த முறையில் குறிப்பிட்ட நேரம் வரையில்தான் பற்களின் உயிரைக் காக்கமுடியும். ஆனால், நானோ உடைந்த பற்களின் உயிரை ஆறு மணிநேரம் வரை காக்கும் வழியைக் கண்டுபிடித்திருக்கிறேன். அது வேறொன்றுமில்லை. இளநீர்தான்!

இளநீரில் உடைந்த பற்களைப் போட்டு எடுத்துச் சென்றால், இரண்டிலிருந்து ஆறு மணி நேரம் வரை பற்களின் உயிரணுக்கள் உயிருடன் இருக்கின்றன. இளநீரில் உள்ள சத்துகளுக்கு அவ்வளவு வலிமை இருப்பதை பல சோதனைகள் செய்து கண்டுபிடித்தேன். இதனை பல் ஆராய்ச்சியாளர்களுக்கு அனுப்பிய போது அவர்களும் தீர ஆராய்ந்து பாராட்டியிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் எனது ஆராய்ச்சிகள் தொடர்கின்றன!" என்றார் கோபிகிருஷ்ணா.

பல்டன்... ஸாரி, வெல்டன் டாக்டர்!

- *கனிஷ்கா*